செ.வெ.எண்: 4/ஜனவரி நாள்: .06.01 .2016

# தருமபுரி மாவட்டம்

***"புன்னகையைத் தேடி-II" (Operation Smile II) என்ற திட்டத்தின் கீழ் காணாமல் போன மற்றும் ஆதரவின்றி சுற்றித்திரியும் குழந்தைகளை கண்டுப்பிடிக்க தருமபுரி மாவட்ட ஆட்சியரகத்தில் வாகன பயணத்தினை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.ஜெ.லோகநாதன்,இ.கா.ப., அவர்கள் முன்னிலையில் மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.***




"புன்னகையை தேடி II " (Operation Smile II) திட்டம் வெற்றிகரமாக செயல்பட்டதை தொடர்ந்து மத்திய அரசின் உள் துறை அமைச்சகம் 01.01.2016 முதல் 31.01.2016 வரை காணாமல் போன மற்றும் ஆதரவின்றி சுற்றித்திரியும் குழந்தைகளை தேடும் பணியாக "புன்னகையை தேடி II" (OperationSmile-II) திட்டத்தை மீண்டும் தொடர அறிவுறுத்தியுள்ளது.

அதனை முன்னிட்டு தமிழகத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசு மற்றும் அரசு சாரா அலுவலர்களை கொண்ட குழுக்கள் அமைக்கப்பட்டு அதன் மூலம் கோயில்கள், பேருந்து நிலையங்கள், சுற்றுலா தலங்கள், மற்றும் இரயில் நிலையங்கள் மற்றும் மக்கள் அதிகமாக கூடும் இடங்களில் ஆதரவின்றி திரியும் குழந்தைகள் இருப்பின் அவர்களை மீட்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் இன்று (06.01.2016) மாவட்ட ஆட்சியகரத்திலிருந்து தருமபுரி மாவட்டம் சமூக பாதுகாப்புத்துறை குழந்தைகள் பாதுகாப்பு அலகு புன்னகையைத்தேடி-II திட்டத்தின் மூலம் ஆதரவின்றி சுற்றித்திரியும் குழந்தைகளை தேடும் குழுவின் வாகன பயணத்தின் இயக்கத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.விவேகானந்தன்.இ.ஆ.ப. அவர்கள் கொடியசைத்து துவக்கிவைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு நல அலுவலர் திரு.கே. கல்யாணசுந்தரம், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் திரு.உதயகுமார், மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி.ரேவதி, தேசிய குழந்தை தொழிலாளர் திட்ட அலுவலர் திரு. சரவணன் , மாவட்ட பிற்படுத்தப்பட்ட மற்றும் சிறுபான்மையின நல அலுவலர் திரு.பிச்சைராமன் மற்றும் சமூக பாதுகாப்புத்துறை, சமூக நலத்துறை, காவல் துறை, குழந்தைகள் நலக்குழுமம், சைல்டு லைன் ஆகிய துறைகளின் அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,தருமபுரி.